# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**30/2019

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திருமதி. கவிதா | ஊர் | : | தென்னங்குடி |
| த.பெ. | : | திரு.பாலசுப்ரமணியம் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 32 | தொழில் | : | இளநிலை உதவியாளர் |

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ஆம் நாள் **வா.சா. 2 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஆவண எண் 32/1987 எங்கள் பதிவு அலுவலகத்தில் காசியம்மாள் என்பவர் கே. ஜோதிராமன் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் தஞ்சாவூர் தாலுக்கா ராமநாதபுரம் கிராம புல எண் ஆர் எஸ் எண் 412/6 , 2ஏக்கர் 33சென்ட் நிலத்தை பொறுத்து அவருக்குள்ள பிரிபடாத பாகம் 29 சென்ட்டை பொறுத்து எழுதிகொடுத்துள்ளார். புல எண் ஆர் எஸ் எண் 412/5இல் 22சென்ட்டில் அவர் வீதம் பிரிபடாத பாகம் 11 சென்ட் மொத்தம் 40 சென்ட்க்கு எழுதிகொடுத்துள்ளார்.

அதேபோல் சரஸ்வதியம்மாள் என்பவர் கே. ஜோதிராமன் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் 16/1988 தஞ்சாவூர் தாலுக்கா ராமநாதபுரம் கிராம புல எண் ஆர் எஸ் எண் 412/6, 2ஏக்கர் 1 சென்ட் நிலத்தை பொறுத்து அவருக்குள்ள பிரிபடாத பாகம் 25 சென்ட்டில் 15 சென்ட் மட்டும் எழுதிகொடுத்துள்ளார்.

தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வில்லங்கசான்றிதழில் இரண்டு பொது அதிகார ஆவணங்களின் குறிப்புகள் உள்ளது.அதேபால் ஜோதிராமன் விற்ற விற்பனைகளில் மேற்படி காசியம்மாள் சரஸ்வதியம்மாள் முதல்வர் என்ற பெயரில்

வருகிறது. அந்த வில்லங்கசான்று **சா.சா.ஆ. 1** ஆகும். மேற்படி கிரைய பத்திர நகல்கள் **சா.சா.ஆ.2, 3** ஆகும்.

<u>4ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

வருவாய் ஆவணங்களின் அடிப்படையில்தான் பதிவு ஏற்பட்டது என்றால் ஆமாம். 1986, 1987 பொதுஅதிகாரஆவணங்கள் 2012 முதல்தான் வில்லங்க சான்றிதழில் வரும் அதற்கு முந்தையவை ஆவணமாக பதிவு மட்டும் ஏற்படும்.

மற்ற பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளபட்டது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.11 17:29:07 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**